# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2016 யூலை

## (AA21) உயர் நிதிக் கணக்கீடு

---

## பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)
(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

பகுதி A ஆனது மொத்தம் 20 புள்ளிகளுக்காக 8 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. இலங்கை கணக்கீட்டு நியமங்கள், தனியுடமை, சம்பளப் பட்டியல், பங்குடமை கட்டளைச் சட்டம், பரிப்பு வரையறுக் கப்பட்ட கம்பனிகள் மற்றும் தொக்கு மதிப்பீடு போன்றவற்றில் பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிப்பதற்காக 8 நோக்கச் சோதனை வினாக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

ஒரு சிறு தொகையினருக்கு மட்டுமே மொத்தமான 20 புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது. பெரும்பாலானவர்கள் வினா இலக்கம் 1.5 இற்குச் சரியாக விடையளித்திருக்கவில்லை. பங்குடமையொன்றின் நன்மதிப்பை மதிப்பிடும் முறைகளுக்குப் பதிலாக, பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஏடுகளில் நன்மதிப்பை பதிவுசெய்யும் முறை பற்றி எழுதியிருந்தனர். பரீட்சார்த்திகள் பாடத்திட்டத்தையும் சுய கற்றல் புத்தகங் களையும் கற்பதன் மூலம் தமது அறிவினை வளர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

## பகுதி B

ஐந்து (05) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

5 புள்ளிகள் ஒதுக்கப்பட்டிருந்த இந்த வினா செம்மையாக்கப்பட்ட காசேடு மற்றும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று ஆகியவற்றைத் தயாரிப்பதுடன் தொடர்புபட்டதாகக் காணப்பட்டது. இந்த வினாவுக்கு அதிகளவான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், செம்மையாக்கப்பட்ட காசேட்டுடன் தொடர்புடைய பதிவுகளை அடையாளங்காணாத குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் காசேட்டிலுள்ள வங்கி நிரலின் வழுக்களைச் செம்மையாக்கம் செய்திருந்தனர்.

அதிகளவான பரீட்சார்த்திகள் காசேட்டு மீதியினைப் பெறுவதையும் சரியான மீதியை வங்கி கணக்கிணக் கத்திற்குக் கொண்டு செல்வதையும் தவிர்த்திருந்தனர். காசேட்டில் பதிய வேண்டிய செம்மையாக்கங்கள்கூட வங்கிக் கணக்ககிணக்கத்தில் பதியப்பட்டுள்ளன. பெரும்பாலான மாணவர்களின் விடைகள், அவர்கள் கோட்பாட்டுரீதியான அறிவைக் கொண்டிருக்கவில்லை என்பதைப் பறைசாற்றுகின்றன. எவ்வாறாயினும், சகல 5 புள்ளிகளையும் பெற்றவர்களின் எண்ணிக்கை உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது.

### வினா 03

இவ்வினா கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு என்பவற்றைத் தயாரிப்பதிலுள்ள அறிவைப் பரீட்சித்துள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளி களையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், சரியாகப் பதிவுகளை விளங்கிக்கொள்ளத் தவறிய ஒரு சில பரீட்சார்த்திகள் 2 கட்டுப்பாட்டுக் கணக்குகளிலும் மாறிமாறிப் பதிந்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் ஆரம்ப மீதிகளைப் பதிந்திருக்கவில்லை. மேலும், ஊடுசெயல்களுடன் தொடர்புடைய பதிவுகள் அது வரவுப் பதிவா அல்லது செலவுப் பதிவா என்பது பற்றிச் சரியாக அடையாளங்காணாது கட்டுப்பாட்டுக் கணக்குகளில் பதிந்திருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

## வினா 04

இது பங்குடமையின் நன்மதிப்புடன் தொடர்புபட்ட ஒரு தனித்த வினாவாகும். இங்கு இலாப / நட்ட விகிதங்கள் பங்காளர்களிடையே மாற்றமடையும் சந்தர்ப்பத்தில் நன்மதிப்பினை செம்மையாக்குவது தொடர்பில் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவினைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஏடுகளில் நன்மதிப்பினைப் பதிவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளைச் சரியாக பதிந்திருந்தபோதிலும், அவர்களால் சரியான முறையில் கணக்கேடுகளிலிருந்து நன்மதிப்பினைப் பதிவழிப்புச் செய்வதற்கு இயலாமற் போயிருந்தது. சிலர் பதிவழிப்புடன் தொடர்புபட்ட சகல பதிவுகளையும் பதிந்திருக்கவில்லை. வினாவைச் சரியாக வாசித்து விளங்கிக்கொள்ளாத சில பரீட்சார்த்திகள் நன்மதிப்பினை பேரேட்டுக் கணக்குகளில் மாத்திரம் பதிந்திருந்தனராயினும் அவற்றை நாட்குறிப்புப் பதிவுகளில் காட்டியிருக்கவில்லை. கோட்பாட்டு ரீதியான அறிவு குறைவாகக் காணப்பட்டதன் காரணமாக நடைமுறைக் கணக்குகளின் ஊடாக நன்மதிப்பு செம்மையாக்கம் செய்யப்பட்ட சந்தர்ப்பங்களையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. நன்மதிப்புடன் தொடர்புடைய பதிவுகள் சரியாகக் காட்டப்பட்டிருந்தபோதிலும், சில பரீட்சார்த்திகள் மூலதனக் கணக்கு களுடன் தொடர்புபட்ட பதிவுகளைப் பதிவதற்குத் தவறியிருந்ததன் காரணமாக புள்ளிகளைப் பெற்றிருக்க வில்லை. மொத்தத்தில், பெரும்பாலானவர்கள் இவ்வினாவுக்கு முழுப்புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது.

## வினா 05

இடைநிலை மட்டத்திலுள்ள இலாப நோக்கற்ற கழகம் ஒன்றின் கணக்குகளுடன் தொடர்புபட்ட இவ்வினாவுக்கு பெரும்பாலான பரீட்சார்த்திகளால் புள்ளிகள் பெறப்பட்டிருந்தன. பெரும்பாலானவர்களால் கொள்ளல் கொடுத்தற் கணக்கில் பதியப்பட வேண்டிய சந்தாப்பணங்களையும் சம்பளங்களையும் சரியான முறையில் அடையாளங்காண முடிந்திருந்தது. வருமான செலவினக் கணக்கிற்குப் பதிலாக கொள்ளல் கொடுத்தற் கணக்கின் அட்டுறுச் செலவுகள் மற்றும் முற்பணப் பெறுவனவுகள் என்பவற்றை செம்மையாக்கம் செய்வதில் கோட்பாட்டுரீதியில் தவறுவிட்ட பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர்.

பரீட்சார்த்திகள் இவ்வினாவினை வாசித்து விளங்கிக்கொள்ளாது விடையளிக்க முற்பட்டிருந்தமையை அவர்களால் வழங்கப்பட்ட விடைகளிலிருந்து காணக்கூடியதாக இருந்தது.

## வினா 06

இவ்வினா நிலையான சொத்துக்களின் விற்பனையுடன் தொடர்புபட்ட நாட்குறிப்புப் பதிவுகளைத் தயாரிப்பது பற்றிய அறிவைப் பரீட்சித்துள்ளது. பல பரீட்சார்த்திகள், அவற்றை எழுதுவதில் கொண்டிருந்த பலவீனங்கள் காரணமாக நாட்குறிப்புப் பதிவுகளைத் தயாரிப்பதற்கான 5 புள்ளிகளையும் கைவிட்டிருந்தனர். சொத்துக்களின் விற்பனை மீதான இலாபம் மற்றும் இயைபுடைய பெறுமானத்தேய்வு என்பன சரியாகக் கணிப்பிடப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் ஊடுசெயல்களுக்கான நாட்குறிப்புப் பதிவுகளைப் பதிவதற்குத் தவறியிருந்தனர். நாட்குறிப்புப் பதிவுகள் சரியாகத் தயாரிக்கப்பட்டிருந்தபோதிலும் விளக்கவுரையற்ற விடைகளே காணப்பட்டன. பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்து புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளாத சிலரும் காணப்பட்டனர். குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் பெறுமானத்தேய்வுக் கணக்கிற்கான ஏற்பாட்டிலிருந்து விற்பனை செய்யப்பட்ட மோட்டார் வாகனத்திற்குப் பொருத்தமான பெறுமானத்தேய்வினைக் கழிப்பதற்குத் தவறியிருந்தனர். கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனம் பிழையாக காசேட்டில் பதியப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. மோட்டார் வாகன விற்பனைக் கணக்கிற்குப் பதிலாக மோட்டார் வாகனக் கணக்கில் மோட்டார் வாகனத்தின் விற்பனை மீதான செம்மையாக்கங்களைப் பதிவதென்பது அடிப்படைக் கோட்பாட்டு வழு ஒன்றாகும். கொள்வனவுத் திகதி மற்றும் விற்பனைத் திகதி ஆகியவற்றைப் புறக்கணித்து முழு வருடத்திற்காகவும் பெறுமானத்தேய்வைக் கணித்திருந்த பரீட்சார்த்திகளும் இருந்தனர். இவ்வினாவுக்கான திருப்தியான விடைகள் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டன.

# பகுதி C

மூன்று (03) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

இவ்வினாவில் பங்காளர்களின் நடைமுறைக் கணக்கு மற்றும் மூலதனக் கணக்கு ஆகியவற்றை நிரல் வடிவில் தயாரிப்பது எதிர்பார்க்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளுக்கு மாத்திரமே இதற்கான முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஓய்வுபெற்ற பங்காளரின் பங்கு மாற்றத்தைச் சரியாக செம்மையாக்கம் செய்யவில்லை. அத்துடன் சிறு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே மீள்மதிப்பீட்டு இலாபங்களைச் சரியாகக் கணித்துப் பகிர்ந்திருந்தனர். பல பரீட்சார்த்திகள் நன்மதிப்புச் செம்மையாக்கத்தினைச் சரியாகப் பதிந்திருந்தபோதிலும், விளங்கிக்கொள்வதில் காணப்பட்ட குறைபாடு காரணமாக அதனை நடைமுறைக் கணக்கில் பதிந்திருந்தனர். மீள்மதிப்பீட்டு இலாபமும்கூட நடைமுறைக் கணக்கில் பதியப்பட்டிருந்த விடைத்தாள்களும் காணப்பட்டன.

மொத்தமாக எடுத்துக்கொண்டால், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியானதொரு மட்டத்தில் காணப்படவில்லை. பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு, மீள்மதிப்பீடு மற்றும் ஓய்வுபெறுதலுடன் இணைந்தவாறு காணப்படுகின்ற பங்குடமையுடன் தொடர்புடைய வினாக்களுக்குத் தாமாகவே விடையெழுதிப் பயிற்சியெடுத்துத் தயாராகுதல் வேண்டும்.

## வினா 08

இவ்வினா விளையாட்டுக் கழகம் ஒன்றின் வருமான செலவினக் கணக்கு மற்றும் நிதி நிலைக் கூற்று ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான ஆற்றலைப் பரீட்சித்திருந்தது. வருமான செலவினக் கணக்கில் உள்ளடக்கப்படவேண்டிய மீதிகள், தரப்பட்டிருந்த கொள்ளல் கொடுத்தற் கணக்கு மற்றும் ஏனைய மேலதிகத் தகவல்களிலிருந்து தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும், குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் அவ்வனைத்தையும் எவ்வித செம்மையாக்கமுமின்றி உள்ளடக்கியிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சந்தா வருமானத்தைச் சரியாகக் கணிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் செய்முறை வேலைகளைத் தெளிவாக இணைத்திருக்கவில்லை.

ஒட்டுமொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இல்லை.

## வினா 09

இவ்வினா பூரணமற்ற பதிவுகளிலிருந்து தனியுரிமை வர்த்தகர் ஒருவரின் நிதி நிலைக் கூற்றினைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுத்தியிருந்தது.

ஒரு சில பரீட்சார்த்திகளுக்கு மாத்திரமே இவ்வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது. வினாவில் என்ன கேட்கப்பட்டது என்பதை விளங்கிக்கொள்ளாது நிதி நிலைக் கூற்றினைத் தயாரித்தமை, செய்முறை வேலைகளைச் சரியாகக் காட்டாமை என்பன இக்குறைந்த மட்டத்திலான செயலாற்றுகைக்குக் காரணமாக இருந்தன. ஒரு சில பரீட்சார்த்திகள் இவ்வினாவை முற்றுமுழுதாகவே முயற்சித்திருக்கவில்லை. காசேடு ஒன்றைத் தயாரிப்பது பெறுமானங்களைப் பெறும் செய்முறைக்குரிய முன்தேவைப்பாடாக இருந்தபோதிலும் ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே அந்த வழிமுறையின்படி வினாவை அணுகியிருந்தனர். அதேபோல், ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளின் சரியான செம்மையாக்கத்தின் மூலம் மூலதன மீதியைப் பெறக்கூடியதாக இருந்தபோதிலும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் அதனைச் சரியாகச் செய்திருக்கவில்லை.

ஒட்டுமொத்த மதிப்பீட்டில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை ஒரு திருப்தியற்ற மட்டத்திலேயே காணப்பட்டது.

# பகுதி D

ஒரு கட்டாய வினா
(25 புள்ளிகள்)

## வினா 10

இவ்வினா வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றின் முற்றடக்க வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைக் கூற்று ஆகியவற்றைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுத்தியிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்தியான பதில்களை வழங்கியிருந்தனர். பரீட்சார்த்திகள் விடையளிப்பதற்கு சரியான வடிவத்தினைப் பயன்படுத்தி யிருந்தமை ஒரு நல்ல போக்காகக் காணப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாகப் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் நிருவாகச் செலவினத்தின் கீழ் வருகின்ற உருப்படிகளை அடையாளங்காணத் தவறியிருந்தனர். எவ்வாறாயினும், அவற்றின் செய்முறை வழிகளைக் காட்டியிருந்தவர்களால் பல புள்ளிகளைப் பெறக்கூடியதாக இருந்தது. கணக்கீட்டு நியமங்கள் மீதான அடிப்படை அறிவு குறைவாக இருந்தமையை இங்கு பொதுவான பலவீனமாகச் சுட்டிக்காட்ட முடியும். சிறு தொகையானோர் மாத்திரமே வருமான வரிச் செம்மையாக்கத்தினைச் சரியாகப் பதிந்திருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் அட்டுறுச் செலவினங்களில் வரும் அவர்களது செம்மையாக்கங்களில் வரவு மற்றும் செலவு பற்றிய அடிப்படை அறிவைக் கொண்டிராமை அவதானிக்கப்பட்டது. குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் நிதி நிலைக் கூற்று மற்றும் வருமானக் கூற்று ஆகியவை தொடர்பிலான உருப்படிகளைக் குழப்பியடித்திருந்தனர். அவர்கள் சரியான வடிவில் அவற்றைக் காட்டுவதற்கான சரியான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். முற்றடக்க வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைக் கூற்று ஆகியவை தொடர்பான வேலைகளை சரியாகச் செய்திருந்த பரீட்சார்த்திகளால் முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது. உரிமையாண்மையின் மாற்றங்கள் தேவைப்படுத்தப்பட்டிராதபோதிலும் சிலர் அதனையும் செய்திருந்தனர். இது அவர்கள் நேரத்தை வீணடித்திருந் ததையும் வினா பற்றிய விளக்கமின்றி விடைகளை எழுதியமையையும் சுட்டிக்காட்டுகிறது.

முக்கியமாக நேர முகாமைத்துவத்தைக் கருத்திலெடுத்து என்ன கேட்கப்பட்டதோ அதற்கு மாத்திரம் விடையளிப்பது அதிக புள்ளிகளைப் பெறுவதற்கு உதவி புரியும்.

பரீட்சார்த்திகள் அடிப்படைக் கணக்கீட்டுக் கோட்பாடுகள், புதிய கணக்கீட்டு நியமங்கள் மற்றும் புதிய கம்பனிச் சட்டங்கள் தொடர்பில் மேலும் விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். வினா இலக்கங்களைச் சரியாக எழுதுவதன் மூலமும் வெவ்வேறு பக்கங்களில் வினாவின் பகுதிகளுக்கு விடை எழுதுவதைத் தவிர்ப்பதன் மூலமும் இலகுவாக அடையாளங்காணக்கூடியவாறு இயன்றவரை விடைகளுக்கு அருகிலேயே செய்முறை வழிகளைக் காட்டுவதன் மூலமும் வினாவுக்காக ஒதுக்கப்பட்ட சகல புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருக்கும்.

- - -

### பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்

1. வினாப்பத்திரத்தைக் கையில் எடுத்ததும் தரப்பட்ட அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும்.
2. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். தேவையற்ற விடயங்களை எழுத வேண்டாம்.
3. பரீட்சையின்போது நேரத்தை வினைத்திறனான முறையில் முகாமை செய்யவும்.
4. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் மற்றும் உங்களது சுட்டிலக்கம் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.
5. கடந்தகால வினாப்பத்திரங்களுக்கு விடையளிப்பதன் மூலம் நீங்கள் பாடம் சம்பந்தமான அறிவினை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன் விடைகளை எழுதுவதற்கான ஆற்றலும் கிடைக்கப்பெறும்.
6. வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச் சொல் நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் **வரைவிலக்கணத்தை** அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.
7. சித்தியடைதல் என்னும் பிரதான நோக்கத்துடன் பரீட்சையினை எழுதவும்.